தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2039, ஐப்பசி 25

2008 நவம்பர் 10, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

> "நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
> மேற்சென்று செய்யப் படும்"

வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்து நம் உயிர் இருக்கும்போதே உயர்ந்த நற்பணிகளை ஆற்றிட முனைய வேண்டும்.

1. இரங்கற்குறிப்புகள்

(அ) முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. ஒ.ப. சோமசுந்தரம் அவர்கள் 1-4-2008 அன்றும், திரு. டி.சி. விஜயேந்திரய்யா அவர்கள் 30-6-2008 அன்றும், திரு. ஆர். ஈஸ்வரன் அவர்கள் 1-8-2008 அன்றும், திரு. வை. தங்கவேலு அவர்கள் 9-9-2008 அன்றும், திரு. ரா. தவசி அவர்கள் 20-10-2008 அன்றும், திரு. ப. மோகன் கந்தசாமி அவர்கள் 7-11-2008 அன்றும் மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஒ.ப. சோமசுந்தரம் அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1977 முதல் 1980 வரை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. டி.சி. விஜயேந்திரய்யா அவர்கள் தருமபுரி மாவட்டம், தளி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத்

தேர்ந்தெடுக்கப்பட்டு 1989 முதல் 1991 வரை நன்கு பணியாற்றியுள்ளார்கள்.

திரு. ஆர். ஈஸ்வரன் அவர்கள் திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் தனித் தொகுதியிலிருந்து ஐந்து முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1985 முதல் 1988 வரை, 1989 முதல் 1991 வரை, 1991 முதல் 1996 வரை, 1996 முதல் 2001 வரை மற்றும் 2001 முதல் 2006 வரை பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. வை. தங்கவேலு அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1985 முதல் 1988 வரை திறம்படப் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. ரா. தவசி அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1980 முதல் 1984 வரை சிறப்புறப் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. ப. மோகன் கந்தசாமி அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டம், பொங்கலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1996 முதல் 2001 வரை நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

(ஆ) ஃபீல்டு மார்ஷல் திரு. மானேக்ஷா, இந்திய இராணுவ முன்னாள் தலைமைத் தளபதி அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய இராணுவத்தின் எட்டாவது தலைமைத் தளபதியாக இருந்தவரும் 40 ஆண்டுகளுக்கு மேலாக இந்திய

இராணுவத்தில் மிகச் சிறந்த முறையில் பணியாற்றி 5 போர்களில் பங்கேற்றவரும், இந்திய இராணுவத்தில் ஃபீல்டு மார்ஷல் என்ற தகுதியைப் பெற்ற இருவரில் முதலாமவரும், பத்ம பூஷன், பத்ம விபூஷன் போன்ற உயரிய விருதுகளைப் பெற்றவருமான முன்னாள் இராணுவத் தலைமைத் தளபதி ஃபீல்டு மார்ஷல் திரு. மானேக்ஷா அவர்கள், 27–6–2008 அன்று தனது 94–வது அகவையில் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

அன்னாரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) திரு. ஹர்கிஷன் சிங் சுர்ஜித், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சித் தலைவர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் மூத்த தலைவரும், பழம்பெரும் சுதந்திரப் போராட்ட வீரரும், சிறந்த நாடாளுமன்றவாதியும், வயதைப் பற்றிக்கூட கவலைப்படாமல் பொதுத் தொண்டிற்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டவருமான திரு. ஹர்கிஷன் சிங் சுர்ஜித் அவர்கள், 1–8–2008 அன்று தனது 92–வது அகவையில் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

முற்பகல் 9–35

அன்னாரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கும் அவர் சார்ந்துள்ள கட்சியைச் சார்ந்த தலைவர்களுக்கும், தோழர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)